# கொள்கை விளக்கக் குறிப்பு 2009–2010



## பேரூராட்சிகளின் இயக்ககம்

# பேரூராட்சிகள் நிர்வாகம்
# கொள்கை விளக்கக் குறிப்பு 2009–2010

## முகவுரை

தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920ன் கீழ் பேரூராட்சிகள் நிர்வகிக்கப்படுகின்றன. மாநிலத்தில் 561 பேரூராட்சிகள் உள்ளன. இவைகள் சிறப்புநிலை, தேர்வுநிலை, முதல்நிலை மற்றும் இரண்டாம்நிலை நகரங்கள் என வருமானத்தை அடிப்படையாகக் கொண்டு வகைப்படுத்தப்பட்டுள்ளன.

பல பேரூராட்சிகள் சுற்றுலா, புராதன மற்றும் புனிதயாத்திரை முக்கியத்துவம் வாய்ந்தவைகளாகும். மேலும், பேரூராட்சிகள், மக்களின் பொருளாதார மேம்பாட்டிற்கான சூழ்நிலையினை உருவாக்கிக் கொடுத்து அப்பகுதி மக்களின் வாழ்க்கைத்தர வளர்ச்சிக்கு வழிகாட்டியாக உள்ளன. 2001–ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி பேரூராட்சிகளின் மொத்த மக்கள் தொகை 76,46,386 ஆகும். தமிழ்நாட்டின் மொத்த மக்கள் தொகையில் இது 13 விழுக்காடு ஆகும். நகர மக்கள் தொகையில் 30 விழுக்காடு மக்கள் பேரூராட்சிகளில் வசிக்கின்றனர்.

## நிர்வாக அமைப்பு

561 பேரூராட்சிகளின் செயல்பாட்டினை கவனிக்க பேரூராட்சிகளின் இயக்குநர் துறைத் தலைவராக செயல்படுகிறார். மாநிலத்தில், 16 மண்டல அலுவலகங்கள் பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்கள் தலைமையில் செயல்படுகின்றன. மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சியர்கள், பேரூராட்சிகளின் கண்காணிப்பு அலுவலர்களாகவும், நிர்வாக அலுவலர்களாகவும் செயல்படுகின்றனர்.

## பேரூராட்சிகளின் செயல்பாடுகள்

பேரூராட்சிகள் பொதுமக்களுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கல், முறையான மழைநீர் வடிகால் மற்றும் கழிவுநீர் அகற்றல், நடைபாதைகள் அமைத்தல், இடுகாடுகளை பராமரித்தல், திடக்கழிவு மேலாண்மை, சாலைகள் அமைத்தல் மற்றும் பராமரித்தல், தெருவிளக்குகள் அமைத்தல், பொதுமக்கள் சேவைக்கான பேருந்து நிலையங்களை அமைத்துப் பராமரித்தல், சமுதாயக் கூடங்கள் மற்றும் சந்தைகள் பராமரித்தல், பொது சுகாதாரத்தை மேம்படுத்துதல் மற்றும் பிறப்பு / இறப்பு சான்றிதழ்கள் வழங்குதல், வீட்டு மனை பகுதிகளுக்கு அனுமதி அளித்தல், கட்டிடம் கட்ட அனுமதி அளித்தல் மற்றும் அபாயகரமான வியாபார பொருட்களுக்கு அனுமதி அளித்தல் போன்ற முக்கிய பணிகளை மேற்கொண்டு வருகின்றன.

## நிதி ஆதாரங்கள்

சொத்துவரி, தொழில் வரி, குத்தகை இனங்கள், குடிநீர் மற்றும் இதர கட்டணங்கள் போன்றவற்றில் இருந்து பேரூராட்சிகள், நிதி ஆதாரங்களை பெற்று வருகின்றன. முத்திரைத்தாள் மேல்வரி மற்றும் கேளிக்கைவரி ஆகியவை பேரூராட்சிகளின் மறைமுக வருவாயாக உள்ளன. மேலும் பேரூராட்சிகள் மாநில நிதி பகிர்வு மற்றும் 12–வது நிதிக்குழு மான்யம் மூலமாக தேவையான அளவு நிதியினை பெற்று வருகின்றன.

## பேரூராட்சிகளின் நிதி வரவு

பேரூராட்சிகளில் 2008–2009ஆம் ஆண்டின் மொத்த நிதி வரவு ரூ.1,15,724 இலட்சம் ஆகும். இதில் மாநில நிதி பகிர்வு நிதியாக ரூ.36045 இலட்சமும், 12–வது நிதிக்குழு மான்யமாக ரூ.3210 இலட்சமும் நிதி பெறப்பட்டுள்ளது. கேளிக்கை வரி, இதர துறைத் திட்டங்களின் மான்யம், அதாவது சுற்றுலா, மலைப் பகுதி வளர்ச்சி திட்டம் குறைந்தபட்சத் தேவைகள் திட்டம் மற்றும் பெரும் திட்டங்களான ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்புத் திட்டம் (JNNURM), சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான நகர்ப்புர கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் (UIDSSMT), ஒருங்கிணைந்த வீட்டு வசதி மற்றும் குடிசைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் (IHSDP), நகர்ப்புர ஏழைகளுக்கான அடிப்படை வசதிகளை ஏற்படுத்தும் திட்டம் (BSUP), பொன்விழா ஆண்டு நகர்ப்புர வேலை வாய்ப்புத் திட்டம் (SJSRY), உள்ளாட்சி உதவித் திட்டம் (LAP), சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் சமுதாய அடிப்படையிலான சுற்றுச் சூழல் வளர்ச்சித் திட்டம் (CBED), பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் பகுதி வளர்ச்சி நிதித் திட்டம் (MPLAD) மற்றும் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி வளர்ச்சி நிதித் திட்டம் (MLACD) போன்ற திட்டங்களின் மூலம் இதர வருவாய் பெறப்படுகின்றன.

## பல்வேறு நிலை அலுவலர்களின் அதிகாரங்கள்

பேரூராட்சிகளின் இயக்குநர், 1920ம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் கீழ் பேரூராட்சிகளின் ஆய்வாளராக செயல்படுகிறார். திட்டங்களைச் சிறப்பாகவும், துரிதமாகவும் செயல்படுத்துவதற்கு ஏதுவாக நிர்வாக மற்றும் தொழில்நுட்ப ஒப்பளிப்பு வழங்கும் அதிகாரிகளுக்கு கூடுதல் நிதி அதிகார வரம்புகளை அரசு உயர்த்தியுள்ளது. பேரூராட்சிகளின் இயக்குநர், மாவட்ட ஆட்சியர்கள், பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்கள்

மற்றும் தொழில்நுட்ப ஒப்பளிப்பு செய்யும் செயற்பொறியாளர், உதவி செயற்பொறியாளர்கள் ஆகியோரின் அதிகார வரம்புகள் உயர்த்தப்பட்டுள்ளன.

குடிநீர் வழங்குதல்

பேரூராட்சிகளில் வசிக்கும் மக்களுக்கு நாள் ஒன்றுக்கு நபர் ஒன்றுக்கு 70 லிட்டர் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதை அரசு இலக்காக கொண்டுள்ளது. குடிநீர் வழங்கும் திட்டங்களை பேரூராட்சிகள் தனித்தும் மற்றும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்துடன் இணைந்தும் பராமரித்து வருகின்றன.

பேரூராட்சி பகுதிகளில் குடிநீர் வழங்கல் திட்டத்தினை மேம்படுத்தவும், நாள் ஒன்றுக்கு நபர் ஒன்றுக்கு வழங்கப்படும் குடிநீர் அளவு 70 லிட்டருக்கும் குறைவாக வழங்கப்படும் பேரூராட்சி பகுதிகளில் பல்வேறு திட்டப் பணிகளின் கீழ் குடிநீர் அபிவிருத்தி திட்டங்களை நிறைவேற்ற தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் இணைந்து செயல்படுத்திட திட்டமிடப்பட்டுள்ளது.

## திட்டங்கள்

### 1. அனைத்து பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்

அனைத்து பேரூராட்சிகளிலும், அனைத்து அடிப்படை வசதிகளையும் அளிக்கும்பொருட்டு அனைத்து பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் என்ற புதிய திட்டம் துவக்கப்பட்டது. இத்திட்டம் 561 பேரூராட்சிகளிலும் 2007–2008 முதல், நான்கு ஆண்டுகளில் படிப்படியாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2007–2008ல் இத்திட்டத்தின் கீழ் 140 பேரூராட்சிகளில் 1493 பணிகள் ரூ.7000 இலட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டன. இத்திட்டப் பணிகளுடன் பிற துறைகளின் இதர திட்டங்களை ஒருங்கிணைத்துப் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. 2008–2009ம் ஆண்டில் 140 பேரூராட்சிகளில் 1438 பணிகள் ரூ.7848 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 2009–2010ம் ஆண்டில் மேலும் 140 பேரூராட்சிகளில் ரூ.7000 இலட்சம் மதிப்பீட்டில் இத்திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது.

### 2. சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான நகர்புர கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் (UIDSSMT)

இத்திட்டத்தின் கீழ் ரூ.608 இலட்சம் மதிப்பீட்டில் மாமல்லபுரம் பேரூராட்சியில் பாதாள சாக்கடை திட்டம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மேலும் இத்திட்டத்தின் கீழ் ஒட்டன்சத்திரம், வேடச்சந்தூர், பாளையம், கூடலூர், சர்க்கார் சாமக்குளம், ஒத்தக்கால்மண்டபம், திருமலையம்பாளையம், சாமளாபுரம், கருமத்தம்பட்டி, செட்டிபாளையம், அ.வள்ளாளபட்டி ஆகிய 11 பேரூராட்சிகளில் ரூ.3784 இலட்சம் மதிப்பீட்டில் குடிநீர் அபிவிருத்திப் பணிகளும் மற்றும் திருப்பத்தூர், லப்பைகுடிக்காடு, செவிலிமேடு, திருச்செந்தூர் ஆகிய 4 பேரூராட்சிகளில் ரூ.4186 இலட்சம் மதிப்பீட்டில் பாதாள சாக்கடை திட்டமும் 2009–2010ம் ஆண்டில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் நிறைவேற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## 3. ஜவஉறர்லால் நேரு தேசீய நகர்ப்புர புனரமைப்பு திட்டம் (JNNURM)

இத்திட்டத்தின் கீழ், போரூர், மாடம்பாக்கம், செம்பாக்கம், சிட்லபாக்கம், பள்ளிக்கரணை, பீர்க்கன்காரணை, பெருங்களத்தூர்,பெருங்குடி மற்றும் திருமழிசை ஆகிய 9 பேரூராட்சிகளில் ரூ.34852 இலட்சம் மதிப்பீட்டில் பாதாள சாக்கடைத் திட்டம் அமைக்கும் பணிகளுக்கு மத்திய அரசின் ஒப்புதல் பெறப்பட்டு, 2009-2010ம் ஆண்டில் சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் மூலம் நிறைவேற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## 4. ஒருங்கிணைந்த வீட்டு வசதி மற்றும் குடிசை பகுதி மேம்பாட்டுத் திட்டம் மற்றும் நகர்ப்புர ஏழைகளுக்கான அடிப்படை வசதித் திட்டம் (IHSDP & BSUP)

ஒருங்கிணைந்த வீடுகள் மற்றும் குடிசை பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 8 பேரூராட்சிகளில் ரூ.2629 இலட்சம் மதிப்பீட்டில் 2465 வீடுகள் கட்டும் பணிகளும் மற்றும் நகர்ப்புர ஏழைகளுக்கான அடிப்படை வசதி திட்டத்தின் கீழ் ரூ.1958 இலட்சம் மதிப்பீட்டில் 5 பேரூராட்சிகளில் 1901 வீடுகள் கட்டும் பணிகளும் நடைபெற்று வருகிறது.

2009–2010ம் ஆண்டில் ஒருங்கிணைந்த வீடுகள் மற்றும் குடிசை பகுதி மேம்பாட்டுத் திட்டம் மற்றும் நகர்ப்புர ஏழைகளுக்கான அடிப்படை வசதி திட்டத்தின் கீழ் ரூ.5517 இலட்சம் மதிப்பீட்டில் 2882 குடும்பங்கள் பயன்பெறும் வகையில் வீடுகள் கட்டித்தருதல், புனரமைத்தல் மற்றும் அடிப்படை வசதிகளை மேம்படுத்தும் பணிகள், சோழவந்தான், பரவை, விளாங்குடி, பெரியநாயக்கன்பாளையம், நெ.4.வீரபாண்டி, வீரகேரளம், கண்ணம்பாளையம், இடிகரை, மதுக்கரை, வேடப்பட்டி, சரவணம்பட்டி, வெள்ளாலூர், கெங்கவல்லி, மோகனூர், சீராப்பள்ளி, ஆலம்பாளையம், தெடாவூர், வீரகனூர், ஆர்.புதுப்பட்டி, அவல்பூந்துறை, ஊத்துக்குளி,

பள்ளபாளையம், கொடுமுடி, லக்கம்பட்டி, பி.மேட்டுபாளையம், கூகலூர், பி.என்.பட்டி, கருப்பூர் மற்றும் வேலூர் ஆகிய 29 பேரூராட்சிகளில் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

**5. பகுதி – 2 திட்டம்**

நடப்பு நிதியாண்டில் ரூ.560 இலட்சம் மதிப்பீட்டில் 28 பேரூராட்சிகளில் புதிதாக அலுவலகக் கட்டிடங்கள் கட்டுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

**6. அடிப்படை கட்டமைப்பு வசதிக்கான நிதி பற்றாக்குறையை ஈடு செய்வதற்கான பங்களிப்பு தொகை**

நடப்பு நிதியாண்டில் இத்திட்டத்தின் கீழ் ரூ.460 இலட்சம் மதிப்பீட்டில் 23 பேரூராட்சிகளில் புதிதாக அலுவலகக் கட்டிடங்கள் கட்டுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

**7. திடக்கழிவு மேலாண்மை திட்ட உட்கட்டமைப்பு மேம்பாடு**

2007–2008ம் ஆண்டிற்கான கேளிக்கை வரி இழப்பினை ஈடு செய்யும் மான்ய உதவி மூலம், 40 பேரூராட்சிகளில் ரூ.400 இலட்சம் மதிப்பீட்டில் திடக்கழிவு மேலாண்மை திட்ட உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் பணிகள் எடுத்துச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

2008–2009ம் நிதி ஆண்டிற்கான கேளிக்கை வரி இழப்பினை ஈடு செய்யும் மான்யஉதவி மூலம், 25 பேரூராட்சிகளில் ரூ.175 இலட்சம் மதிப்பீட்டில் திடக்கழிவு மேலாண்மை திட்ட உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் பணிகள் இந்த ஆண்டில் எடுத்துச் செயல்படுத்தப்படும்.

**8. 12வது நிதிக்குழு மான்யம்**

இத்திட்டத்தின் கீழ் பேரூராட்சிகளுக்கு ரூ.3210 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் 50 சதÅj« bjhifahd %.1605 Ïy£r¤Âš திடக்கழிவு மேலாண்மை திட்டப் பணிகளும், மீதமுளள தொகையில் சாலைகள், கழிவுநீர் வடிகால் பராமரித்தல் மற்றும் மின் கட்டணங்கள் செலுத்துதல் போன்ற பணிகளும் மேற்கொள்ளப்படும்.

**9. பொன்விழா ஆண்டு நகர்ப்புர வேலைவாய்ப்புத் திட்டம் (SJSRY)**

நகர்ப்புரப் பெண்கள், வேலையற்ற இளைஞர்கள் மற்றும் வேலைவாய்ப்பு குறைவாக உள்ள ஏழைகளுக்கு வேலை வாய்ப்பை உருவாக்கித் தர இத்திட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. இத்திட்டம் 561 பேரூராட்சிகளிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் திறன் மேம்பாட்டு பயிற்சி அளித்தல், வறுமை கோட்டிற்கு கீழ் உள்ள நபர்களுக்கு பொருளாதார உதவி அளித்தல், நகர்புர பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு

குழுக்களுக்கு பொருளாதார உதவி அளித்தல், சிக்கனம் மற்றும் நாணய சங்கங்களுக்கு சுழல் நிதி அளித்தல், சமுதாய கட்டமைப்பு, நகர்ப்புற கூலி வேலைவாய்ப்புத் திட்டம் ஆகிய திட்டங்கள் அடங்கியுள்ளன.

2008–2009ம் ஆண்டில் அனைத்து பேரூராட்சிகளிலும் நகர்ப்புர ஏழை மக்களுக்கு சுய வேலை வாய்ப்பு வழங்க ரூ.1425 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 10. கணினி மற்றும் மென்பொருள் வழங்கல்

தேசிய தகவல் மையத்தின் மூலம், மத்திய அரசின் தகவல் தொழில் நுட்பத் துறையின் நிதி உதவி ரூ. 248 இலட்சம் மதிப்பில் 450 பேரூராட்சிகளுக்கு கணினி மற்றும் மென்பொருள் வழங்கப்பட்டுள்ளன.

## 11. மனித வள மேம்பாடு

இத்துறையில் 13.05.2006–லிருந்து நாளது தேதி வரை செயல் அலுவலர், இளநிலை உதவியாளர், வரித்தண்டலர், துப்புரவு ஆய்வாளர், துப்புரவு மேற்பார்வையாளர், துப்புரவு பணியாளர்கள், குடிநீர் வழங்கல் பராமரிப்பு பணியாளர்கள், தெருமின் விளக்கு பராமரிப்பு பணியாளர்கள் மற்றும் அலுவலக உதவியாளர்கள் உள்ளிட்ட நிர்வாக அமைப்பை சார்ந்த பதவிகளுக்கான காலியிடங்களில் 5014 பணி நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன. இவற்றில் தொகுப்பூதியத்திலிருந்து ஊதிய ஏற்ற முறைக்கு கொண்டு வரப்பட்டவர்களின் எண்ணிக்கை 2924, கருணை அடிப்படையிலான நியமனங்கள் 452, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் நியமனங்கள் 19, பணித்தொகையில் கூலி பெறும் பணியாளர்களிலிருந்து ஊதிய ஏற்ற முறைக்கு கொண்டு வரப்பட்டவர்கள் 177, வேலை வாய்ப்பகம் மூலம் நியமனம் செய்யப்பட்டவர்கள் 1416 மற்றும் எல்காட், அரக்கோணம் ஸ்டீல் மற்றும் மக்கள் தொகை கணக்கெடுப்பு துறையில் பணியிழந்தவர்களுக்கான நியமனங்கள் 26 ஆகும்.